பக்கங்கள் 21+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 20 சனிக்கிழமை 03.05.2025 | அதிர்வு 273

## தேர்தல் விதிமுறைகளை மீறிய 43 வேட்பாளர்கள் இதுவரை கைது!

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை 524 முறைப்பாடுகள் பொலிஸ்க்குக் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# யாழில் நீதி கோரி ஊடகர்கள் போராட்டம்!

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தையொட்டி படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் இன்று போராட்டத்தை முன்னெடுத்தனர். யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஊடக அமையத்துக்கு முன்பாக மாலை 3 மணியளவில் இந்தப் 02

# தேர்தல் தோல்விப் பயத்தில் உளறும் தமிழ்க் கட்சிக்காரர்

## தேசிய மக்கள் சக்தி அரசுடன் விளையாடாதீர்கள்; இப்படி எச்சரிக்கின்றார் அமைச்சர் சந்திரசேகர்

(எஸ்.நிதர்ஷன்)

"ஜனாதிபதி அநுரவை யாழ்ப்பாணத்தில் கால் வைக்க விடமாட்டோம் என்று மக்களால் நிராகரிக்கப்பட்ட தமிழ்க் கட்சிக் காரர்கள் சூளுரைக்கின்றார்கள். எமது தேசிய மக்கள் கட்சியின் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் வேட்பாளர் கபிலன் மீது வழக்குப் போடுவோம் என்று அவர்கள் மிரட்டுகின்றார்கள். வழக்குப் போடுவதைத் தவிர அவர்களுக்கு எதுவும் தெரியாது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் தோல்விப் பயத்தில் அவர்கள் இப்படி உளறித் திரிகின்றார்கள்." 02




# அநுர அரசாங்கத்தின் கையாலாகத்தனம் அடுத்த வருட ஆரம்பத்தில் வெளிப்படும்!

### அதை நாம் கூட்டாக எதிர்கொள்வோம் என்கிறார் மனோ எம்.பி.



"உழலை ஒழிக்கின்றோம் என நண்பர் அநுர கூறுவதை, நான் வரவேற்கின்றேன். இது எனது கொள்கையும் ஆகும். ஆனால், இதை மட்டும் சொல்லி, நாள் தோறும் புதுப் புது பொய்களையும் சொல்லி, இனியும் நாட்டை நடத்த முடியாது. நாட்டின் முதல் முக்கியத்துவம் பொருளாதாரத்துக்கு வழங்கப்பட்டே ஆகவேண்டும். இல்லாவிட்டால் வர்த்தகம், தொழிற்றுறை கடுமையாகப் பாதிக்கபடும். வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடும். பணப் புழக்கம் கணிசமாகக் குறையும். இந்தியப் பொருளாரத்துடன் நெருக்கமான 02

## 43 வேட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

அதேநேரம், தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 43 வேட்பாளர்களும், 190 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது 41 வாகனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல் பிரசாரத்தில் யாழ்ப்பாணம் மக்கள் எமக்கு அமோகமான ஆதரவைத் தந்தார்கள். கடந்த தேர்தலை விட பாரிய வெற்றி இம்முறை கிடைக்கும்.

எமது அரசின் செயற்பாடுகளைப் பார்த்து தமிழ்க் கட்சிகள் புலம்பி தற்போது ஊளையிடுகின்றார்கள்.

நாங்கள் வேகமாக யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்புகின்றோம்.

தமிழ் மக்களுடைய தன்மானத்தைத் தேசிய மக்கள் சக்தி அரசின் கீழேயே கட்டிக்காக்க முடியும்.

நாடாளுமன்றத் தேர்தலில் வீட்டுக்கு அனுப்பப்பட்ட நபர்கள் அநுர, தேசிய மக்கள் சக்தி எனப் புராணம் பாடுகின்றார்கள்.

சாக்கடைக்குள் வீழ்ந்துள்ள தமிழ்க் கட்சிகள் எம் மீது சாக்கடை இருப்பதாகக் கூறுகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட எமது மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தமிழ்க் கட்சிகள் அவதூறு பரப்புகின்றன.

ஜனாதிபதி அநுரவை யாழ்ப்பாணத்தில் கால் வைக்க விடமாட்டோம் என்று மக்களால் நிராகரிக்கப்பட்ட தமிழ்க் கட்சிக்காரர்கள் சூளுரைக்கின்றார்கள்.

எமது தேசிய மக்கள் கட்சியின் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் வேட்பாளர் கபிலன் மீது வழக்குப் போடுவோம் என்று அவர்கள் மிரட்டுகின்றார்கள்.

வழக்குப் போடுவதைத் தவிர அவர்களுக்கு எதுவும் தெரியாது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் தோல்விப் பயத்தில் அவர்கள் இப்படி உளறித் திரிகின்றார்கள்.

கபிலன் தனியாள் அல்ல. கபிலனுடன் விளையாடுவது என்பது தேசிய மக்கள் சக்தி அரசுடன் விளையாடுவது போன்றது.

இதுவரை இருந்த யாழ். மாநகர மேயர்கள் குறைந்த பட்சம் யாழ்ப்பாணத்துக்கு எதுவும் செய்யவில்லை.

நாங்கள் ஆளுங்கட்சி என்பதை மறந்துவிடக் கூடாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி எம்மிடம் உள்ளார்.

பேச்சு சுதந்திரத்தை வைத்து ஊடகங்கள், சமூக வலைத்தள எழுத்தாளர்கள், யூடியூப்பர்கள் தமிழைத் தவறாகப் பயன்படுத்துகின்றார்கள். விடுதலைப் புலிகளின் கனவை நாங்கள் நனவாக்குவோம். புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட நகைகள் மக்களிடம் ஒப்படைக்கப்படும்." – என்றார்.

## அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகளை ஏற்படுத்தி, விசேட வர்த்தக சலுகைகளைக் கோரி பெற்று முன்னேறுவோம் என்றால், அதைச் செய்ய அநுர அரசுக்குப் பொருளாதார தூர நோக்கு இல்லை. ஆகவே, அடுத்த வருட முதல் காலாண்டில், பொருளாதார நெருக்கடிக்கான வாய்ப்புகள் மிக அதிகம். அதை எதிர்கொள்ள நாம் கூட்டாகத் தயாராகுவோம் ."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பு – மட்டக்குளியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே மனோ கணேசன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இந்த அரசு இலங்கை வரலாற்றில் மிகப் பெரும் பலத்துடன் ஆட்சிக்கு வந்தது. ஆனாலும், ஆறே மாதங்களுக்குள் பொருளாதாரத் துறையில் திக்குமுக்காடி நிற்கின்றது. அரச செலவைக் குறைக்கின்றோம், உழலை ஒழிக்கின்றோம், ஊழல் செய்தவர்களை வழக்குப் போட்டு சிறையில் அடைக்கிறோம் என்ற நண்பர் அநுரவின் அரசு சொல்வதை நான் நூற்றுக்கு நூறு வரவேற்கின்றேன். இவை எனது கொள்கைகளும்தான்.

ஆனால், இதை மட்டும் சொல்லிச் சொல்லி, நாட்டை நடத்த முடியாது. நாள்தோறும் பொய்களை மாத்திரம் சொல்லி அரசை நடத்த முடியாது. நாட்டின் முதல் முக்கியத்துவம் பொருளாதாரத்துக்கு வழங்கப்பட்டே ஆகவேண்டும். ஆனால், அதைச் செய்ய அநுர அரசுக்குத் தூர நோக்கு இல்லை.

ஏற்றுமதியில் வீழ்ச்சி, வெளிநாட்டு மூலதனம் அறவே இன்மை, வேலை இழப்பு, பணப் புழக்கம் குறைவு என்பவற்றைத்தவிர்க்க இந்தியப் பொருளாதாரத்துடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தி விசேட வர்த்தக சலுகைகளைக் கோரி பெற்று முன்னேறுவோம் என்றால், அவை அரச செவிகளில் ஏறவில்லை.

2024 ஆம் வருடம் 5 விகிதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி, 2025 ஆம் வருடத்தில் 3.5 விகிதமாகக் குறையலாம் என உலக வங்கி ஆரூடம் கூறியுள்ளது. ஜனாதிபதி ட்ரம்பின் வரிக் கொள்கை நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. ஏற்கனவே இந்தியாவில் இருந்து இலங்கைக்கு முதலீடுகள் வருவது நின்று போய், இன்று கணிசமான இலங்கை ஆடை உற்பத்தியாளர்கள் தங்கள் தொழிலகங்களை இந்தியாவை நோக்கிக் கொண்டு செல்லும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆகவே, இவை எல்லாம் சேர்ந்து, அடுத்த வருட முதல் காலாண்டில், பொருளாதார நெருக்கடிக்கான வாய்ப்புகள் மிக அதிகம்.

இந்நிலையில், இன்று நாம் இடம் பெறும் அரசியல் கூட்டணியை மேலும் விரிவுபடுத்தி ஊழல் இல்லாத, ஆனால், அனுபவம், ஆற்றல் கொண்ட மிகப்பெரிய அரசியல் கூட்டணியைக் கட்டியெழுப்பும் முயற்சிகளை நாம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டோம். மக்கள் ஆணையுடன் வந்துள்ள அரசை வீழ்த்தும் நோக்கம் எமக்கு கிஞ்சித்தும் கிடையாது. ஆனால், எமக்கான தேசிய பொறுப்புகளை நாம் நிறைவேற்றத் தயங்க மாட்டோம்.

கொழும்பில் நாம் பலமாக இருக்க வேண்டும். இந்தத் தேர்தலில், கொழும்பு மாநகர சபை – தெஹிவளை மாநகர சபை ஆகிய உள்ளூராட்சி சபைகளின் அனைத்து வட்டாரங்களிலும் தொலைபேசி சின்னத்துக்கு வாக்களியுங்கள். நாடாளுமன்றத் தேர்தலின் போது, வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் இருந்தமையைத் தவிர்த்து, முகம் தெரியாத நபர்களுக்கு வாக்களித்தமையையும் நிவர்த்தி செய்து, இந்தத் தேர்தலில் அணிதிரண்டு வாக்களியுங்கள்.

இந்த முறை வாக்குச்சீட்டில் விருப்பு வாக்கு இலக்கங்கள் இல்லை. வேட்பாளர் பெயர்கள் இல்லை. கட்சிச் சின்னங்கள் மாத்திரமே இருக்கும். ஆகவே, சின்னங்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்பதை மனதில் கொள்ளுங்கள்." – என்றார்.

# யாழில் நீதி கோரி ஊடகர்கள் போராட்டம்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு நீதி கோரியும் ஊடகவியலாளர்கள் கோஷங்களை எழுப்பினர்.









# மன்னார்- யாழ். பிரதான வீதி கள்ளியடியில் கோர விபத்து!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார்- யாழ். பிரதான வீதி, கள்ளியடி பகுதியில் இன்று சனிக்கிழமை (3) காலை இடம்பெற்ற கோர விபத்தில் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னாரில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றும் பணியாளர்களை ஏற்றி வந்த தனியார் பஸ் கள்ளியடி பகுதியில் பணியாளர்களை ஏற்றுவதற்காக வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதன் போது குறித்த பஸ்ஸுக்கு நேர் எதிரே அதிவேகமாக வந்த கண்டைனர் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸுடன் மோதி குறித்த வீதியில் மோட்டார் சைக்கிளில் நின்ற ஒருவர் மீதும் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் நின்ற நபரும் காயமடைந்தார் . அவரது மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது.

இந்த விபத்தில் கண்டைனர் ரக வாகனத்தின் சாரதி, உதவியாளர் ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

ஆடை தொழிற்சாலை பணியாளர்கள் 09 பேரும் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து இலுப்பைக் கடவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.









# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது பட்டமளிப்பு இன்று ஆரம்பம்

(றிபாஸ்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு விழா, இன்று சனிக்கிழமை(03) பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் நடைபெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் பதில் உபவேந்தர் யூ.எல்.மஜீத் தலைமையில் சனி, மற்றும் ஞாயிறு இரு தினங்களாக நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் ஆறு அமர்வுகளில் 2077 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

முதலாம் நாள் முதல் அமர்வில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கொடகொட பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இரண்டாம் அமர்வில் களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை பேராசிரியர் கலாநிதி சீதா.பி. பண்டாரவும் மூன்றாவது அமர்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டின் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானியும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இரண்டாம் நாள் முதல் அமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் துணைத்தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே.எல் வசந்த குமாரவும் இரண்டாம் அமர்வில் ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறையின் பேராசிரியர் கலாநிதி மனோஜ் சமரதுங்கவும் மூன்றாவது அமர்வில் யாழ் பலகலைக்கழகத்தின் பட்டப்படிப்பு பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் ரீ. வேல்நம்பியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பிரயோக விஞ்ஞான பீடத்தில் 172 மாணவர்களும் பொறியியல் பீடத்திலிருந்து 82 மாணவர்களும் தொழினுட்பவியல் பீடத்திலிருந்து 102 மாணவர்களும் கலை கலாச்சார பீடத்திலிருந்து 314 மாணவர்களும் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீடத்திலிருந்து 342 மாணவர்களும் முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்திலிருந்து 378 மாணவர்களும் வெளிவாரி பட்டப் படிப்பு மாணவர்கள் 687 மாணவர்களுமாக 2077 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளதாக பதிவாளர் எம். ஐ. நௌபர் தெரிவித்துள்ளார்.





# இறுதிச் சடங்கு நிகழ்வில் தகராறு! குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை!!

இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை - சிகிரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேன்வலயகம, கிம்பிஸ்ஸ பகுதியில் நடைபெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வு ஒன்றில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் கிம்பிஸ்ஸ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஹேன்வலயகம, கிம்பிஸ்ஸ பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய நபரே இதன் போது உயிரிழந்துள்ளார்.



கொலை செய்யப்பட்டவருக்கும் சந்தேகநபருக்கும் இடையே சிறிது காலமாக நிலவிய தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சிகிரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தமிழர் தேசம் தயார்

கிடைத்த அதிகாரத்தைத் தக்க வைத்து ஆட்சி பீடத்தில் தொடர்வதற்காக, இனவாதத்திற்கு எதிராகப் பேசும் சமரசவாதிகளாக தங்களைக் காட்டிக் கொள்கின்றனர் ஆளும் தரப்பினரான தேசிய மக்கள் சக்தி கட்சியினர்.

‘‘வாக்கு வேட்டைக்காக வடக்கில் உள்ள சில தமிழ் அரசியல்வாதிகளும் ராஜபக்ஷக்களின் சகோதரர்களாக மாறி இனவாதத்தைக் கையில் எடுத்துள்ளனர்.’’ - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் கூறுகின்றமை மிக வேடிக்கையான விடயம்.

இந்த நாட்டில் இனவாதத்தின் - பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்கத்தின் - ஊற்றுக்கண்ணாக இருந்தவர்களே தேசிய மக்கள் கட்சியின் மூலக்கட்டமைப்பான ஜே.வி.பிதான்.

தமிழர் தேசம் இராணுவ, அரசியல் வலுச் சமநிலையில் சிங்களத்துடன் சமதையாக இருந்து பேசிய காலத்தில், அவர்களின் பலத்தை உடைத்து அநாதரவான நிலைக்கு தமிழர் தேசத்தை இட்டுச் செல்வதற்கான தந்ரோபாயத்தை ராஜபக்ஷக்களோடு சேர்ந்து பேரினவாதம் மூலம் கட்டவிழ்த்தவர்களே இந்த ஜே.வி.பியினர்தான்.

ஆழிப் பேரலை மீள் கட்டமைப்பு நிதியை தென்னிலங்கையோடு தமிழர்கள் சமரசமாக பிரித்து ஒன்றாகக் கையாளக் கிடைத்த வாய்ப்பை இனவாதத்தை முன்னிறுத்தி முறியடித்தவர்கள் இதே ஜே.வி.பியினர்தான்.

13ஆம் திருத்தம் மூலம் இணைக்கப்பட்டிருந்த தமிழர் தாயகத்தை நீதிமன்றுக்குச் சென்று பிளந்தவர்கள் தாங்கள்தான் என்று தென்னிலங்கையில் வாக்கு வேட்டைக்காக இனவாதத்தோடும் மமதையோடும் பீற்றிக் கொள்பவர்கள் இந்த ஜே.வி.பியினர்தான்.

தமிழர் தேசம் வடக்கில் தங்களுக்குள் பிரிந்து நின்றதை வசமாகப் பயன்படுத்தி இடையில் புகுந்து பொதுத்தேர்தலில் சில பிரதிநிதிகளை தெரிவு செய்யும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்ட இந்தப் பேரினவாதிகள் இப்போது சாத்தான் வேதம் ஓதுவது போல சமரசம், நல்லிணக்கம், இன சௌஜன்யம் பற்றி எல்லாம் நம் மத்தியில் வந்து நின்று பாடம் எடுக்கும் அவல நிலைமை.

அதிகாரத்திற்கு வருவதற்காக கண்மூடிக் கொண்டு தத்துவங்கள் பிளந்த வாக்குறுதிகளை அள்ளிக் கொட்டிய ஜே.வி.பி. தரப்பு அவற்றில் எவற்றையுமே செய்யவில்லை, செய்யப்போவதில்லை. வெறும் வாய்ச் சவடால் அரசியல்தான் தொடர்கின்றது.

வடக்கிலும், கிழக்கிலும் - தமிழர் தாயகத்திலும் - அதே நிலைமைதான் நீடிக்கின்றது. தமிழர் தாயகத்தில் இனவாத அரசியலுக்கு தமிழ் மக்கள் இனி இடம் அளிக்க மாட்டார்கள் என்பது உறுதி என்று கூறிக்கொண்டு அதன் மூலம் தமிழர் தாயகத்தின் தனித்துவத்தைச் சிதறடித்து, தன்னுடைய பேரினவாதக் கைங்கரியத்தை ஒப்பேற்றுவதுதான் ஜே.வி.பியின் மூலோபாயத் திட்டம்.

தமிழர்கள் தங்களுக்குள் அணி பிரிந்து நின்றமையால் நாடாளுமன்றத் தேர்தலில் மட்டும் அந்த வாய்ப்பை வசமாக பயன்படுத்திக் கொண்ட ஜே.வி.பியினருக்கு அவர்களின் பேரினவாத நிகழ்ச்சித் திட்டத்திற்கு இன்னும் மூன்று நாள்களில் நடக்கும் உள்ளாட்சித் தேர்தலில் தமிழர்கள் சரியான செருப்படி பதில் கொடுப்பார்கள் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கலாம்.

தமிழர் தாயகத்தில் எந்த உள்ளூராட்சி சபையிலும் ஜே.வி.பியின் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தை பெற இம்முறை வாய்ப்புக் கிட்டவே கிட்டாது. தெற்குக்கும் சேர்த்து சரியான பதிலடி வடக்கில் கிடைக்கும் என்று உறுதியாகக் கூற முடியும். அதைச் செய்வதற்கு தமிழர் தேசம் தயாராகிறது என்பதுதான் கள நிலைமை.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




# சிங்கள பேரினவாத அரசுகள் ஒரு காலமும் தமிழருக்காக எதுவும் செய்யத் தயாரில்லை!

## மன்னார் அடம்பனில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்

**(மன்னார் எஸ்.ஆர். லெம்பேட்)**

சிங்கள பேரினவாத அரசுகள் ஒரு காலமும் தமிழர்களுக்காக எதுவும் செய்யத் தயாரில்லை. நாங்கள் அவர்களுடன் சேர்ந்து பயணிப்பதால் என்ன பலன். நாங்கள் நாங்களாக இருக்கும் வரைக்கும் நாங்கள் பலமான ஒரு சக்தியாக இருக்கும் வரைக்கும் நாங்கள் ஒற்றுமையாகவும் பலமாகவும் இருக்கின்றோம் என்பதை உலகம் புரிந்து கொள்ளும் வரைக்கும்தான் எங்களுக்கு விடிவு சாத்தியமாக இருக்கும் என்று கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

மன்னார் அடம்பனில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஏற்பாடு செய்த மக்கள் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை (2) மாலை இடம்பெற்றது.

இதன்போது கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களாக நாங்கள் வாழ வேண்டும் என்றால் தமிழர்கள் தம்மை தேசிய இனமாக அடையாளப்படுத்தப்பட்ட வேண்டும் என்றால் நாங்கள் இந்த மண்ணின் மைந்தர்களாக வாழ வேண்டும் என்றால் எம் மீதாக அடக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டும்.

இந்த அரசுக்குத் தமிழர் தரப்பால் இரு பிரச்சினைகள் உள்ளன. ஒன்று ஜெனிவாவில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம். தமிழர்கள் மீது இனப்படுகொலை முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் போர்க் குற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளார்கள். அவர்களுக்கு உணவு அனுப்பாமல் கொல்லப்பட்டுள்ளனர்.

நான்கு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருந்த போது 70 ஆயிரம் பேருக்குத்தான் உணவு அனுப்பப்பட்டது. குழந்தைகள் குண்டுத் தாக்குதல்களில் அழிக்கப்பட்டுள்ளனர்.

இதனை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. இதனை அறிக்கை மூலம் ஆவணப்படுத்தி ஜெனிவாவுக்கு, ஏனைய உலக நாடுகளுக்கும் கொடுத்தவர் வேறு யாரும் இல்லை. மன்னார் மறைமாவட்டத்தின் மறைந்த ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை. எந்த அரசியல் கட்சிகளும் அதனை வழங்கவில்லை. நாங்கள் சாட்சியம் அளிக்கவில்லை.அதை வழங்கியது ஒரு மத தலைவர். அவர் அரசியல்வாதி இல்லை. தமிழ் தேசிய இனத்தை நேசித்ததால் தமிழ் இனம் பற்றி அவர்சிந்தித்தமையால் இந்த இனத்துக்காக இதனைச் செய்தார். இந்த இனத்துக்கு எதிராக இடம்பெற்ற அநியாயத்தை உலகம் வரை கொண்டு சென்ற ஒரு உண்ணதமான இறை தூதர்தான் இராயப்பு யோசேப்பு ஆண்டகை.

அவர் வழங்கிய ஆவணத்தை இன்று அழிக்க முடியாத நிலை காணப்படுகிறது. இலங்கைக்கு இந்த ஆவணம் ஒரு பாரிய தலையிடி.– என்றார்.





# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





# தமிழர் தலைவிதியைத் தீர்மானிப்பது யார்?

## காரைதீவில் கோடீஸ்வரன் எம்.பி. ஆக்ரோஷமாக கேள்வி

(வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் பிறந்த காரைதீவு மண்ணின் தலைவிதியை அங்கு வாழும் தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கப் போவது ஆதம்பாவாவா அல்லது வசந்தவா? மக்களை சிந்தியுங்கள்.

இவ்வாறு காரைதீவில் இடம்பெற்ற இலங்கை தமிழரசுக்கட்சி கட்சியின் மாபெரும் உள்ளூராட்சிச் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் கேள்வி எழுப்பினார் .

இந்தப் பிரச்சார கூட்டம் காரைதீவு 12 புளியடியில் அந்த வட்டாரத்தின் பிரதான வேட்பாளர் சின்னதம்பி சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

அங்கு கோடீஸ்வரன் மேலும் பேசுகையில்,

காரைதீவு மண்ணில் இதுவரைக்கும் இலங்கை தமிழரசுக் கட்சி தான் ஆட்சி செய்து வந்தது.

இங்கே போட்டியிடுகின்றவர்களைத் தீர்மானிப்பவர்கள் தமிழர்களாக இருந்தார்கள். தமிழர் தமிழரை ஆள வேண்டும் என்ற நோக்கில்தான் தந்தை செல்வா இலங்கை தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். பின்னர் வந்த தேசியத் தலைவர் பிரபாகரனும் அதே பாணியில் தமிழரை தமிழர் ஆளும் சுயாச்சி சுயநிர்ணய உரிமை வேண்டும் என்றார்.

ஆனால் இன்று பேரினவாத கட்சி ஒன்றுக்கு ஜால்ரா அடித்துக்கொண்டு அபிவிருத்தி என்று சிலர் மாயை வலையில் சிக்கியுள்ளனர். அவர்கள் தனித் தமிழ் வேட்பாளர்களாக தமிழரால் தெரிவு செய்யப்பட்டிருந்தால் நாம் ஏற்றுக் கொள்வோம். அதில் கலப்பு உள்ளது.

ஆனால், ஆதம்பாவால் தெரிவானால் அவர்களுக்கு தெரியாமல் இந்த மண் பறிபோகும். அப்போது அவர்களால் எதுவும் செய்ய முடியாது. கையறு நிலையில் இருப்பார்கள்.

அந்த வேட்பாளர்களை தீர்மானித்ததும் ஆதம்பாவாவாதான் என்பதை நீங்கள் மறந்து விட முடியாது.

அவரால் வந்தவர்கள் நாளை இந்த மண்ணை சுயமாக சுதந்திரமாக உரிமையோடு பாதுகாக்க முடியுமா? ஒரு போதும் முடியாது.

அல்லது காரைதீவு மண்ணுக்கு ஏதாவது நேர்ந்தால் அதைக் காப்பாற்ற ஆதம்பாவாவா முன்வருவாரா? ஒரு போதும் வர மாட்டார். கடைசி வரைக்கும் முடியாது.

தமிழர்களுக்கு என்றும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியால் மாத்திரமே முடியும்.

எனவே அபிவிருத்தி என்ற மாயைக்குள் சிக்கி எமது மண்ணையும் மக்களையும் இழக்க காரைதீவு மக்கள் ஒரு போதும் விரும்ப மாட்டார்கள்.

காரைதீவு மக்கள் மகத்துவமானவர்கள் படித்தவர்கள். புத்திஜீவிகள் நிறைந்த மண். எனவே அங்கு இந்த முறையும் தொடர்ச்சியாகத் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பது நிச்சயமாகும் .

எனவே காரைதீவில் உள்ள தன்மானத் தமிழன் ஒருவரும் தமிழ் தேசியப் பரப்பில் உள்ள கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சிகளுக்கோ பேரினவாத கட்சிகளுக்கோ வாக்களிக்க மாட்டார்கள் என்பதை நான் அறிவேன். அதனை நிச்சயம் நீங்கள் காப்பாற்றுங்கள்.– என்றார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# எங்கள் மீது அடக்குமுறையை திணிக்கும் சூழ்நிலை உருவாகினால் அரசுக்கு எச்சரிக்கை விடுக்கப்படும்!

### செல்வம் அடைக்கலநாதன் எம். பி. சுட்டிக்காட்டு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

ஜனாதிபதி இனவாதத்தை அழிப்பதாகக் கருதினால் அல்லது பயங்கரவாதமாக இதனைக் கருதினால் அது அவர்களின் தவறு என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இனப் பிரச்சினை இருக்கின்றது. அதனை தீர்க்கும் கடமையும், பொறுப்பும் இந்த அரசுக்கு இருக்கின்றது.

இனவாதத்தை ஒழிப்போம் என்று மீண்டும் எங்கள் மீது எமது மக்களின் வாக்குகளையும் பெற்றுக் கொண்டு இந்த அரசு அடக்கு முறையைத் திணிக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்குமாக இருந்தால் இந்த அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் ஊடகத்துக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு மன்னார் மாவட்டத்தில் நிர்ணயிக்கக் கூடிய ஒரு சக்தியாகத் திகழும். மன்னார் நகர சபை உள்ளடங்களாக அனைத்து சபைகளிலும் யாருடன் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைப்பது குறித்து உரிய நேரத்தில் முடிவெடுப்போம்.

தமிழ் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளுடன் எமது கலந்துரையாடல்கள் இடம் பெறும்.அவர்களுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளை அலங்கரிக்கும் நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்.

தேசியத்துடன் இருக்கும் தமிழ் கட்சிகள் ஓரணியில் திரளக் கூடிய அஸ்திவாரமாக அமையும். அந்த வகையில் இந்த ஒற்றுமை என்பது மாகாண சபைத் தேர்தல் வந்தாலும் கூட குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் மக்களுக்கு ஏற்படக் கூடிய பிரச்சினை எதுவாக இருந்தாலும் ஒற்றுமையாக நாங்கள் செயற்படக் கூடிய ஒரு சூழலை மக்கள் ஆதரிக்கக் கூடிய ஒரு வாய்ப்பு உள்ளது.



உள்ளூராட்சி சபைகளில் ஒற்றுமை வெளிப்படும்போது தொடர்ச்சியாக நாங்கள் சேர்ந்து பயணிக்கக் கூடிய சில நேரங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என பயணிக்கக் கூடிய ஒரு அஸ்திவாரத்தை இடுகின்ற ஒரு சந்தர்ப்பத்தை நாங்கள் இதனால் ஏற்படுத்தி கொள்ள முடியும். மன்னார் மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிர்ணயிக்கின்ற ஒரு சக்தியாக இருக்கும்.

என்.பி.பி. நாட்டின் பல பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்கள் இனவாதத்தை ஒழிப்பதாக தெரிவிக்கின்றார்கள்.அதற்காக பாரிய சட்டங்களைக் கொண்டு வருவதாகவும் கூறுகிறார்கள்.

எங்களுடைய இனம் இந்த நாட்டில் சுதந்திரமாக தமது நிலத்தில் வாழக் கூடிய அனைத்து உரித்துக்களையும் கொண்ட இனமாக தமிழினம் இருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் பூர்வீகத்தைக் கொண்ட ஒரு பிரதேசமாக இருந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் எமது இனத்துக்கு ஏற்படுத்தும் அநீதிகளைத் தட்டிக்கேக்கும் வகையில் ஜனநாயக போராட்டங்கள், ஆயுதப் போராட்டங்கள் இடம்பெற்றன.

அதற்கான தியாகங்களை எமது இளைஞர் யுவதிகள், பொதுமக்கள் எல்லோரும் தியாகம் செய்துள்ள வரலாறு இன்றைக்கும் உள்ளது. இந்த வரலாற்றின் தன்மைதான் ஐ.நா. சபை வரைக்கும் கதவை தட்டி உள்ளது என்பது உண்மை.

எனவே பயங்கரவாத தடைச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும். இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்க முடியாது. நாங்கள் இனத்தின் பால் எங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளையும் எங்கள் தேசத்தை கட்டிக் காக்கும் வகையில் எமது உரிமைகளை நாங்கள் தக்க வைக்கும் வகையிலும், நாங்கள் ஒரு தனித்துவமான இனம் என்பதை கூறிக் கொள்ளும் வகையிலும் எங்களுடைய போராட்டங்கள் அமைந்துள்ளன.- என்றார்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE

# உள்ளூராட்சி சபைகளில் அதிகாரம் உள்ளூர் கட்சிகளே செலுத்த வேண்டும்

**ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் சாவகச்சேரி நகரசபை வேட்பாளர் கிசோர்**

(எஜ். நிதர்ஷன்)

நடைபெறவுள்ளது உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல். அதில் உள்ளூர் கட்சிகளே அதிகாரம் செலுத்த வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் சாவகச்சேரி நகரசபை வேட்பாளர் கிசோர், தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்து உள்ளூர் அதிகார சபையின் செயற்றிறனை வீணாக்கும் நிலையியை உருவாக்கக் கூடாது என்றும் வாக்குகளைத் தமிழ் தேசியப் பரப்பில் இருக்கும் கட்சிகளுக்கு வழங்குவ காலத்தின் தேவை என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பை முன்னெடுத்து இவ்வாறு சுட்டிக்காட்டிய அவர்கள் மேலும் கூறுகையில்,

தேர்தல் ஆணையகத்தின் குழறுபடியால் எமது வேட்பாளர் பட்டியல் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டபோதும் நாம் எமது உரிமையை சட்டத்தின் மூலம் மீண்டும் பெற்றுக்கொண்டோம்.




இந்த சூழ்நிலையால் மக்களிடம் சென்று எமது கருத்துக்களை சொல்லி பிரசாரம் செய்வதற்கான காலமும் குறைவாகிப் போனது.

பதவிக்காக நாம் தேர்தலில் போட்டியிடவில்லை. மக்களின் நலன்களை முன்னிறுத்திய சேவையை செய்யவே நாம் இந்த தேர்தலில் இறங்கியுள்ளோம்.

அதேநேரம் எமது யாழ்ப்பாணம் கல்வி, அறிவு, பண்பாடுகளில் அதி உச்ச நிலையில் இருக்கும் ஒரு மாவட்டம்.

ஆனால் ஒரு பைத்தியத்தையும், 3 பொம்மைகளையும், நிலத்தொடர்போ வாழ்வியல் தொடர்போ இல்லாத ஒரு அமைச்சரையும் நாடாளுமன்றம் அனுப்பியதால் யாழ்ப்பாணத்தின் மானம் கொடிகட்டிப் பறக்கும் நிலைக்குச் சென்றுவிட்டது.

குறிப்பாக யாழ். மாவட்ட மக்கள் மாற்றம் என்று கூறி பேரினவாத தேசியக் கட்சியான தேசிய மக்கள் கட்சிக்கு வாக்களித்து யாழ்ப்பணத்தை கோமாளியாக்கிவிட்டனர்.

அதனால்தான் கூறுகின்றோம், பொதுத்தேர்தலில் நடந்த குழப்பங்கள் போன்று இந்த உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலில் ஏற்படக்கூடாது.

அதனால் சாவகச்சேரி மக்கள் நன்கு அறிந்த முகங்களான சங்கு சின்னத்தில் போட்டியிடும் எமது கட்சியின் வேட்பாளர்களது கரங்களைப் பலப்படுத்துவர்கள் என்று நம்புகின்றோம்.- என்றார்.

# பெயரை மாற்றினால் வரலாறும் மறைக்கப்படும் என்று அர்த்தமல்ல

**தமிழரசுக் கட்சியின் யாழ். மாநகர சபை வேட்பாளர்!**

(எஸ்.நிதர்ஷன்)

பெயரை மாற்றி, மாற்றம் என்ற கோசத்துடன் மக்களிடம் வந்தால் ஒருவரின் குண இயல்புகளும் வரலாறும் மறைக்கப்பட்டுவிடும் என்றோ மாற்றம் வந்துவிடும் என்றோ அர்த்தமல்ல.

அது யாழ். மக்களின் இருப்பை இல்லாதொழிக்க தீட்டப்படும் இரகசியச் சதிவலை என்று தமிழரசுக் கட்சியின் யாழ். மாநகர சபை வேட்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இன்றையதினம் ஊடக சந்திப்பை முன்னெடுத்த தமிழரசுக் கட்சியின் யாழ். மாநகர சபை வேட்பாளர்களான நிருஜா தர்சாந், ஜெகதீஸ்வரன் மயூரன் மற்றும் முகமட் ஆகியோர் முன்னெடுத்திருந்தனர்.




இதன்போது இவ்வாறு கூறிய அவர்கள் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கு முன் ஒரு தடவைக்கு பலமுறை சிந்தித்து வாக்களிப்பது அவசியம்.

உள்வீட்டுப் பிரச்சினையில் அயல் வீட்டார் நுழைவது சரியானதொன்றல்ல. அதேபோன்றுதான் எமது கட்சிக்குள் இருக்கும் பிரச்சினைகளை நாம் பேசித் தீர்மானிப்போம்.

தமிழ் தேசிய கூட்டு என்று இருந்து நாம் பட்ட வலிகள் ஏராளம். அதன் விளைவாகவே நாம் இன்று தனித்துவமாக போட்டியிடுகின்றோம்.

அபகீர்த்தியும் சேறடியும் எம்மீது பூசப்படுவது தென்னிலங்கையின் நிகழ்ச்சி நிரலில் ஒன்று. இதை மக்கள் புரிந்துகொள்வது அவசியம்.- என்று தெரிவித்தனர்.

# 2025 ஆண்டுக்கான உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஏற்பாடுகள் அம்பாறையில் பூர்த்தி

## அம்பாறை தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

2025 ஆண்டுக்கான உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட செயலாளருமான சிந்தக அபேவிக்ரம குறிப்பிட்டார்.

எதிர்வரும் 2025 ஆண்டுக்கான உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பாக அம்பாறை மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

2025 ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்தலை எதிர்வரும் 06 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 19 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 4,78000 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

2025 ஆண்டிற்கான உள்ளூராட்சிமன்ற தேர்தலில் மாவட்டத்தில் உள்ள 19 உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக 458 வாக்களிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 202 வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களாகும்.



இவ்வாறு உரிய இடங்களில் எண்ணப்பட்டு அந்தப் பகுதிக்குப் பொறுப்பான உதவி தெரிவத்தாட்சி அலுவலருக்கு தெரிவிக்கப்படும். பின்னர் உள்ளூராட்சி மன்றத்துக்குத் தெரிவான பிரதிநிதிகள் குறித்து உதவி தெரிவத்தாட்சி அலுவலகர் அறிவிப்பார்.

தொடர்ந்து வாக்குகள் உள்ளிட்ட சகல ஆவணங்களும் மத்திய நிலையமான அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்துக்கு எடுத்து வரப்படும். பின்னர் உத்தியோக பூர்வமாக உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான பிரதிநிதிகளின் பெயர் விவரங்கள் வெளியிடப்படும்.

இது தவிர வாக்குப் பெட்டி வாக்குச் சீட்டு இதர ஆவணங்கள் விநியோகித்தல் நடவடிக்கைகள் அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் தேர்தலுக்கு முதல் நாள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் தினத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறைமைகள் தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிஸார் , தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏனைய தரப்புக்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையத்தில் காலை 07 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்படும்.மாலை 04 மணிவரை வாக்களிப்பு நிலைய வரிசையில் தரித்து நிற்கும் வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை பிற்பகல் 04 மணிக்கு பின்னர் வாக்களிப்பு நிலையத்தினுள் உட்பிரவேசிக்க இடமளிக்க முடியாது.- என்றார்.



# உள்ளூராட்சித் தேர்தலின் போது உரிமை மீறினால் முறையிடலாம்!

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ்**



(பாறுக் ஷிஹான்)

1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பு யாப்பின்படி, மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை, சுதந்திரமாக அரசியலில் ஈடுபடும் உரிமை, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான உரிமைகளுடன் சட்டத்துக்கு முன் யாவரும் சமம் என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த வகையில் இலங்கை நாட்டின் பிரஜை ஒருவர் அரசியல் விடயங்களில் ஈடுபடவும், தேர்தலில் போட்டியிடவும், வாக்களிக்கவும் உரிமையைக் கொண்டிருக்கிறார்.

தேர்தல் என்பது ஒரு நாட்டின் மக்கள் பொது வாழ்வில் பதவிகளை நிர்வகிப்பதற்காக ஒரு தனி நபரைத் தேர்ந்தெடுக்க அல்லது முடிவெடுக்க ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு செயன்முறையாகும். தேர்தல் திகதி அறிவித்த பின்னர் அரசியல்வாதிகளும் அவர்களது ஆதரவாளர்களும் ஒருவருக்கொருவரான போட்டியில் வாக்காளர்களிடம் நேரடியாகச் சென்று அவர்களை அறிமுகம் செய்து வாக்குகளைக் கேட்கும் முறைமையை காலம் காலமாக செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் மக்களுக்கு லஞ்சம் கொடுத்து அல்லது அச்சுறுத்தல் விடுத்து வாக்குகளை கேட்பது தேர்தல் ஜனநாயக முறைமைக்கு முரணாகும்.

ஏப்படி வாக்குப் பதிவு செய்வது என்பதைப் பற்றி தவறான தகவல்களையும், எப்படி வாக்காளர்களைக் குழப்புவது அல்லது தவறான தகவல்களை அளிப்பது இரகசிய வாக்குப் பதிவு முறைமையினை மீறுவது வாக்குப் பெட்டியில் வாக்குச் சீட்டுக்களை முன்கூட்டியே நிரப்புவது, வாக்காளர்களை அச்சுறுத்துவது போன்றவைகள் தேர்தல் மீறல்களாகவே கருதப்படும்.

ஓவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் அரசியல் அமைப்புக்கு அமைவாகச் செயற்படுவதற்கு உறுதிமொழி செய்துள்ளனர். அரச உத்தியோகத்தர்கள் கொண்டுள்ள சட்ட ரீதியான கடமைகளையும், பொறுப்புக்களையும் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது நடவடிக்கை மேற்கொள்ளாமல் விடல் பக்கச் சார்பாக செயற்படல் அரசமைப்பு யாப்பின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

அவ்வாறு மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குப் புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை நடத்துவதற்கு மற்றும் அவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

இந்த அடிப்படையில் எமது பிராந்தியத்தில் தேர்தல் நடைபெறுவதற்கு முன், தேர்தல் தினத்தன்று அல்லது தேர்தலின் பின்னர் அரச, நிர்வாக, நிறைவேற்றுத் துறையினர் அடிப்படை உரிமையை மீறியதற்கான அல்லது மீறப்படுவதற்கான ஏதுக்கள் இருக்குமாக இருந்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்ய முடியும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர், அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.



# போதிய பஸ் சாரதிகள் இன்மையால் பாதிக்கப்படும் பரு.டிப்போ சேவைகள்

**(வடமராட்சி நிருபர் )**

போதிய பஸ் சாரதிகள் இன்மையால் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவால் நடத்தப்படும் பஸ் சேவைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பருத்தித்துறை – யாழ்ப்பாணம், பருத்தித்துறை – கொடிகாமம் ஆகிய பிரதான பாதைகளில் மாத்திரமன்றி நீண்ட தூர சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவில் பணியாளர் விலகிச் சென்ற சாரதிகள் மற்றும் இடைநடுவில் விலகிச் சென்ற சாரதிகள் உள்ளிட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இந்த டிப்போவில் 14 சாரதிகளுக்கான வெற்றிடங்கள் இருப்பதாகவும் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமையாலேயே பஸ் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.



# நடைபெறும் உள்ளூராட்சிசபை தேர்தலும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சவால்களும்

**வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி ‘புதிய திசைகள்’ அமைப்பு வெளியிட்ட அறிக்கை இது.**

ஒரு சமூகத்தின் அடிப்படை தளமாகக் கருதப்படும் ஊருக்கான ஆட்சி அதிகாரமே இந்தத் தேர்தலின் அடிப்படை. ஓர் ஊரின், அதன் வட்டாரத்தின் நலனில் அக்கறை கொண்ட ஒரு பிரதிநிதி மக்களால் தெரிவு செய்யப்படும் பொழுது அந்தப் பிரதிநிதி அந்தப் பகுதியின் பொருளாதார அபிவிருத்தி, நிர்வாகம், உள்கட்டமைப்பு என்பவற்றை பிரதானமாக முறைப்படுத்தும் கடமைப்பாடு அவருக்கு உள்ளது.

அதேவேளை கல்வி, சமூக ஒழுங்கு, வேலை வாய்ப்பு உருவாக்கம், பண்பாட்டு நிகழ்வுகளை ஊக்குவித்தல், பெண்கள் வலுவூட்டல், பொருளாதார ரீதியாக பின்தங்கியோருக்கான நிவாரணம் என்னும் வகையில் பல விடயங்களில் செல்வாக்கு செலுத்த முடியும். உள்ளூராட்சி சபைகளுக்கு என ஒதுக்கப்படும் நிதியும் அதற்கான அதிகார எல்லைகளுக்குள்ளும் நின்று இந்த பணிகளில் பலவற்றை நிறைவேற்றுவதுதான் மக்களால் தெரிவு செய்யப்படுபவர்களின் கடமைகளாகும்.

தமிழ் மக்களின் இன்றைய அரசியல் பிரதிநிதித்துவம் எப்படி தமிழரின் தேசிய உணர்வுகளில் பிழைப்பு நடத்துகிறது என்பதற்கு புதிதாக விளக்கம் எதுவும் தேவையில்லை. ஆனால் பல குறைபாடுகள் இருப்பினும், இந்த உள்ளூர் தமிழ்ப் பிரதிநிதித்துவமும் கூட அரசியல் கட்சிகள், அரசியல் பிரமுகர்களின் பிடிகளுக்குள் சிக்குப்பட்டு ஒரு நாடாளுமன்றத் தேர்தல் வடிவம் பெற்றிருப்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

கிராமங்களில், நகரங்களில், புறநகர் பகுதிகளில் மக்கள் தங்களுக்கு தேவையான வகையில் அமைப்புகளை உருவாக்கி வாழ்வதும், தமது பகுதி சார்ந்த விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வும், தேவையான கோரிக்கைகளை சரியான இடங்களுக்கு கொண்டு சென்று சாதிப்பதற்கான சமூக வளர்ச்சியைக் கொண்டிருப்பதும் அவசியமான ஒன்றாகும். இந்த வளர்ச்சி என்பது உள்ளூர் தலைமைகள், அரசியல் தலைமைகள் மூலம் ஊக்குவிக்கப்பட்டு படிப்படியாகக் கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதுவரை கால தமிழ் உள்ளூர் தலைமைகளும், அரசியல் தலைமைகளும் செய்தவைதான் என்ன என்ற விசனம் தமிழர்கள் மத்தியில் எழுகிறது. உள்ளூர் தலைமைகளில் சில தனிநபர்களின் ஊர் தொடர்பான பல அர்ப்பணிப்புகளும், பகுதி முன்னேற்றத்திற்கான உழைப்புகளையும் மறுப்பதற்கில்லை. இப்படிப்பட்ட தனிநபர்களின் உண்மையான உழைப்பை நாம் ஆயுதப் போராட்ட காலத்திற்கு முன்பு ஒரு வடிவத்திலும் , போராட்ட காலகட்டத்தில் வேறொரு வடிவத்திலும், தற்போது காலத்திற்கு ஏற்ற வடிவத்திலும் காண்கிறோம். தமிழ் மக்கள் மத்தியில் சரியான உள்ளூர் தலைமைகள் இல்லாமல் இல்லை. ஆனால் அது முறையாக வளர்த்தெடுக்கப்படாத, பெரியளவு முதிர்ச்சி கண்டிராத, தமது பகுதி மக்களின் கட்டமைப்புகளின் தன்மைக்கேற்ப தன்னியல்பானதாகவும் பலவீனமானதாகவும் இருப்பதுதான் இதன் பிராதன பிரச்சினையாகும்.

தமிழ் சமூகத்தின் பலவீனங்களாக சாதியம், பாலின சமத்துவமின்மை, பிராந்திய / பிரதேச வேறுபாடுகள் என்பன உள்ள சூழலில், சமூகமாக சிந்திக்கும் தன்மைகள் குறைவடைந்து ஒவ்வொருவரும் தான்சார்ந்து சிந்திக்கும் போக்கு வளர்த்து விடப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளை கட்டிக் காப்பதிலும், வளர்த்து விடுவதிலும் தமிழ் அரசியல் சமூகத் தலைமைகளுக்கும், பௌத்த சிங்கள அதிகாரத் தலைமைகளுக்கும் பெரும் பங்கு இருக்கிறது.

உள்ளூராட்சி சபை பிரதிநிதித்துவத்தை அரசியல் சாக்கடையாக மாற்றுவதிலும், தனிநபர் போட்டி மற்றும் குழிபறிப்புகளாக மாற்றுவதிலும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் பெரும்பங்கு இருக்கிறது.

தமிழ் மக்கள் தமது தேசிய உரிமைகளுக்காக போராடிய காலங்களில் இருந்து இலங்கை அரச ஒத்தோடிகளாக இருந்து வரும் கனவான்களும், போலி தலித்தியம் பேசி ஒடுக்கப்படும் சாதிப் பிரிவு மக்களை இழிவு படுத்தும் பிரிவுகளும், பிரதேசவாதம் பேசி பிரதேச-தியாகிகளாக தம்மைக் காட்டிக் கொள்ள விழையும் சக்திகள், போலி இடதுசாரிகள் பிரிவு அடிப்படையில் ‘ஏக்க-ராட்சிய’ என்னும் உள் அரசியலுடன் இலங்கை தேசியக் கட்சிகளுக்கு ஆதரவாகவும் என பல தரப்புகள் தமிழ் மக்களுக்கு எதிரான வழியில் இந்த உள்ளூராட்சி தேர்தல் காலகட்டத்திலும் செயலாற்றத் தவறவில்லை.

தமிழ் மக்களின் ஊர்களிலும், அவர்களது அரசியல் தலைமையிலும் காணப்படும் இந்தப் பலவீனங்களைப் பயன்படுத்திக் கொண்டு குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க வந்திருக்கிறது இந்த இலங்கை தேசியக் கட்சியான என்பிபி. தமிழ் மக்களின் சமூக ஏக்கங்களை அரசியல் அறுவடை செய்வதும், அரசியல் தலைமையின் தவறுகள் பலவீனங்களை கணிப்பீடு செய்து சந்தர்ப்பவாதமாக மீட்பர் வேடம் போடுவதும் என்பிபியின் ஒரு கபடம் நிறைந்த அரசியல் அணுகுமுறை என்பதை தமிழ் மக்கள் உணருவது அவசியம்.

எம்மை அழிப்பதற்கு முழுமையாக தோள் கொடுத்து நின்ற இரத்தக் கறை படிந்த இவர்கள் அதிகாரத்தில் இருக்கும் வசதியைப் பயன்படுத்தி எமது பகுதிகளில் சில தமிழ்ப் பிரதிநிதிகளை கண்டறிந்திருப்பதன் மூலம் எமது உண்மையான பிரதிநிதிகளாக ஆகிவிட முடியாது.

தமிழ் கட்சிகள், பிரமுகர்களை கடந்து உங்கள் பகுதிக்கு உண்மையாக உழைக்கக் கூடிய உங்களில் ஒருவரைத் தேர்தெடுக்கவேண்டிய தேர்தல் களம் இது.

இதில் தமிழராக உலாவரும் பௌத்த சிங்கள சாயம் பூசிய என்பிபி கட்சியின் பிரதிநிதிகளுக்கு தமிழ் மக்கள் இடமளிப்பது என்பது எமக்கு நாமே குழிபறிக்கும் வேலையாகும்.

இது நாடாளுமன்ற அரசியலில் இருந்து மாறுபட்ட எமது ஊர்களுக்கான அதிகாரம் என்னும் வகையில், இதை ஒருபோதும் எம்மை ஏமாற்றி சிதைத்துவரும் தவறானவர்களின் கைகளில் கொடுத்து விடுவதென்பது யுத்தத்திற்கு பிந்தைய எமது சமூகத்திற்கு மீளமுடியாத பாதிப்புகளைத் தொடர்ந்து தரக்கூடியது என்பதை தமிழராகிய நாம் நினைவில் கொண்டு இந்தத் தேர்தலை எதிர்கொள்வோம்.



# நெற்செய்கை அதிகரித்தல் தொடர்பான விழிப்பூட்டல் பனங்கண்டடிச் சேனையில்

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆயித்தியமலை பனங்கண்டடிச் சேனையில் நெற்செய்கையில் உற்பத்தி திறனை அதிகரித்தல் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி கிறிஸ்டினா முரளிதரன் பிரதம அதிதியாகவும், கொமர்ஷல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் ஆர்.கஜரூபன், பிரதேச செயலாளர் என். சத்தியானந்தி, மாவட்ட விவசாய பணிப்பாளர் சனீர், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ரீ. கிரிதரன், உதவி விவசாய பணிப்பாளர் காயத்திரி வேணுதாசன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் விவசாய போதனாசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விவசாயிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

பரசூட் முறை, இயந்திர நாற்று நடுகை போன்றவற்றின் மூலம் ஒரலகு பரப்பின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 2 கண்டங்களில் 20 ஏக்கர் பயிர்ச் செய்கை இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்குக் கொமர்ஷல் வங்கி மற்றும் கிழக்கு பல்கலைக்கழகம் என்பன அனுசரனை வழங்கியிருந்தன.







# அம்பாறை அரச அதிபர் தலைமையில் உயர் மட்ட மாநாடு செயலகத்தில் நேற்று

( வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ர தலைமையில் நேற்று அம்பாறை மாவட்ட செயலகத்தில் உயர் மட்ட மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன், துணை மாவட்ட செயலாளர் லலந்தா டி சோய்சா சிரிவத்ன உதவி மாவட்ட செயலாளர் ஜனக் சம்ரா, மாவட்ட உதவி திட்டமிடல் இயக்குனர், மாவட்ட பொறியியலாளர், 19 பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் போது, அம்பாரா பிராந்திய செயலகம் 19 பிரதேச செயலகங்கள் மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் ஆகியவற்றில் உள்ள பிரச்சினைகள் தனித்தனியாகக் கலந்துரையாடப்பட்டன.

அதன்படி, நிறுவன பிரச்சினைகள், அபிவிருத்திப் பிரச்சினைகள், நிதி பிரச்சினைகள், நிலப் பிரச்சினைகள் மற்றும் பிராந்திய செயலாளர் பிரிவுகளில் உள்ள பிற பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றதுஇ

அதேவேளை பிரதேச செயலாளர்கள், தற்போதைய சூழ்நிலையில் தங்கள் கடமைகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதையும், பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் குறித்து பிரதேச செயலாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.





# ‘நிம்மதியைத் தேடி’ நூல் வெளியீடு மெல்பேரனில்!

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் காப்பாளரும் எழுத்தாளருமான வி.எஸ் கணநாதனின் சிறுகதைத் தொகுப்பு நூலான “நிம்மதியைத் தேடி” வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியீடு விக்ரோறியன் தமில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய ஆதரவாளர்களையும் மற்றும் கலை, இலக்கிய ஆர்வலர்களையும் இந்நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்க ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



# நல்லை ஆதீனத்தை நினைவு கூர்ந்து இந்த வாரத்தை பிரார்த்தனை வாரமாக்குக!

## அகில இலங்கை சைவ மகா சபை வேண்டுகோள்

(எஸ். நிதர்ஷன்)

சிவபெருமான் திருவடி நிழலை அடைந்த நல்லை ஆதீன குருமகா சந்நிதானத்தை நினைவு கூர்ந்து இந்த வாரத்தை பிரார்த்தனை வாரமாக அனுஷ்டிக்குமாறு ஈழத்து சைவ சமயிகளிடம் அகில இலங்கை சைவ மகா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அகில இலங்கை சைவ மகா சபை வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த அறிக்கையில்
தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறிப்பாக நாளை ஞாயிற்றுக்கிழமை அனைத்து அறநெறிப் பாடசாலைகளிலும் சமய நிறுவனங்களிலும் சுவாமிகளின் நினைவுப் பிரார்த்தனைகளை உணர்வு பூர்வமாக அனுட்டிக்குமாறு வேண்டுகின்றோம்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் ஈழத்து சைவ சமயத்தின் அடையாளமாக உலகளாவிய ரீதியிலும் நாடாளாவிய ரீதியிலும் அனைத்து நிகழ்வுகளையும் பிரதிநிதிப்படுத்திய உயரிய குரு முதல்வருக்கு நாம் செய்யும் கைம் மாறாக அது இருக்கும்.

இளமைக்கால வாழ்வை சைவ சமய மேன்மைக்காக துறந்து யுத்த கால நெருக்கடிகளை எல்லாம் தன்னந் தனியாக கடந்து சைவர்களின் அடையாளத்தை பேணிய மகத்தான ஆத்மா அவர்.

எளிமையான எவரும் அணுகக் கூடிய சமயத் தலைவரான ஆதீனம் மிக எளிமையாகவே தன் விருப்பப்படி இறுதி வணக்க நிகழ்வையும் கண்டார்.

அந்த மகத்தான குருமுதல்வருக்கு உயரிய கௌரவத்தையும் வணக்க வழிபாடுகளையும் செய்வது மட்டுமன்றி சுவாமிகள் கட்டிக்காத்த உயரிய ஆதீன பாரம்பரியத்தைச் சைவ சமய பீடங்கள், அமைப்புக்களின் தலைவர்கள் கூடி அவர் விட்டுச் சென்ற பணியை தொடர குருமகா சந்நிதானம் ஒருவரை உடனடியாக தெரிந்தெடுத்து அருளாட்சி பொறுப்பை ஒப்படைத்தல் சைவசமயிகள் யாவர் முன்னும் தற்போது உள்ள கடமை ஆகும். – என்றுள்ளது.





# தேசிய மக்கள் சக்தியின் ராஜபக்ஷ முகம்!



புருஜோத்தமன் தங்கமயில்

எதிர்க்கட்சியில் இருக்கும் வரைக்கும் உவப்பாக இருக்கும் உரிமைப் போராட்டங்கள், மனித உரிமைக் கோரிக்கைகள், கருத்துச் சுதந்திரத்துக்கான வெளி உள்ளிட்ட ஜனநாயக அம்சங்கள் எல்லாமும் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துவிட்டால் கசப்பாக மாறிவிடுகின்றன. இதற்கு, அநுர குமார திஸநாயக்கவும், அவர் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கூட விதிவிலக்கல்ல என்பதை நாளும் பொழுதும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த மே தினத்தன்றே, ஜனாதிபதியும் அவரது ஊடகப் பிரிவும் ஜனநாயகப் போராட்டங்கள் மீதும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் கூறான ஊடக சுதந்திரத்தின் மீதும் அச்சுறுத்தல் விடுக்கும் அளவுக்கான செயற்பாடுகளைப் புரிந்திருக்கிறார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம், கொழும்பு காலிமுகத் திடலில் இடம்பெற்றது. ‘அரகலய’ போராட்டத்தின் பின்னராக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ரணில், காலி முகத்திடலில் அரசியல் சார் நிகழ்வுகளை நடத்துவதற்கு தடை விதித்திருந்தார். தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்ததும், ஆளுங்கட்சியாக தன்னுடைய முதல் மே தினக் கூட்டத்தை, இலட்சக்கணக்கானவர்களின் பங்களிப்போடு காலிமுகத் திடலில் நடத்தியது. அந்த நிகழ்வில் உரையாற்றிய அநுர, “...தொழிற்சங்கங்கள் தங்களின் பழைய மனப்பான்மையை கைவிட வேண்டும். நாட்டை கட்டியெழுப்பும் முயற்சிகளில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும். அற்ப விடயங்களுக்காக போராடக் கூடாது..” என்று கூறினார். தேசிய மக்கள் சக்தியின் உண்மையான முகமான மக்கள் விடுதலை முன்னணி எனும் ஜே.வி.பி, அதிகார அடக்குமுறைகள், வர்க்க பேதங்களுக்கு எதிராக ஐம்பதுகளுக்கும் அதிகமான ஆண்டு கால போராட்ட வரலாற்றைக் கொண்டது. ராஜபக்ஷக்களுக்கு எதிராக நாட்டு மக்கள் நடத்திய ‘அரகலய’வின் விளைவில் பிறந்ததுதான், தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம். நாட்டில் அதிகளவான தொழிற்சங்கப் போராட்டங்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் போராட்டங்கள், வேலையற்ற பட்டதாரிகள் போராட்டங்கள் என்று வருடமொன்றில் அரைவாசிக் காலம் ஜே.வி.பி. போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தது. அதுதான்,பல ஆண்டுகளாக தென் இலங்கையில் 5 வீதமான வாக்குகளைப் பெற்று வந்தாலும் ஜே.வி.பி.யை தக்க வைத்தது. குறிப்பாக, அந்தக் கட்சி தேர்தல்களில் மூன்று, நான்கு நாடாளுமன்ற ஆசனங்களைத்தான் கடந்த காலத்தில் வென்றிருந்தாலும், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக ஒன்றியங்கள் என்று போராட்டங்களை பாரியளவில் நடத்துவதற்கான ஆளணியைக் கொண்ட தரப்புக்களுக்குள் ஆளுகை செலுத்தி வந்திருக்கின்றது. ஜே.வி.பி, தேசிய மக்கள் சக்தியாக மாறிய பின்னரும்கூட அவர்களை தென் இலங்கை ஆரம்பத்தில் சீண்டவேயில்லை. ராஜபக்ஷ்ச்க்களுக்கு எதிரான ‘அரகலய’ கோபம், நாட்டை மாறிமாறி ஆண்ட பாரம்பரியக் கட்சிகள் அனைத்தின் மீதான கோபமாகவும் கடந்த இரு தேர்தல்களிலும் பிரதிபலித்தது. அதுதான், அநுர அலையாக மாறியது. தேசிய மக்கள் சக்தியை கரை சேர்த்தது. அப்படியான நிலையில்தான், அநுரவுக்கும், அவரது தோழர்களுக்கும் ஆட்சிக்கு வந்ததும், ஜனநாயகப் போராட்டங்கள் எல்லாமும் எரிச்சலூட்டுகின்றன.

தொழிற்சங்கங்கள் தங்களின் பழைய மனப்பான்மையைக் கைவிட வேண்டும், அற்ப விடயங்களுக்காக போராடக்கூடாது என்று அநுர கூறத் தலைப்படுவது, கடந்த காலத்தில் தங்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக நூற்றுக்கணக்கான போராட்டங்களை அற்ப காரணங்களை முன்வைத்து அவரும் நடத்தியிருக்கிறார் என்ற பொருளில் கொள்ள முடியும். ஏனெனில், ஜே.வி.பி கடந்த காலங்களில் மக்களை அசௌகரியப்படுத்தும் பல போராட்டங்களை நடத்தியிருக்கின்றது. அதில், ஆயுத மோதல்களை மீண்டும் ஆரம்பித்து பல்லாயிரக்கணக்கான மக்களை பலிவாங்கும் இறுதிப்

தொடர்ச்சி▼




சர்ச்சைக்குரிய படம் இதுதான்.

# தேசிய மக்கள் சக்தியின் ராஜபக்ஷ முகம்!

தொடர்ச்சி▲

போருக்கு வித்திட்டதும் அடங்கும். அதுபோல, கொழும்பு நகரத்தில் சாதாரண மக்களின் பயணத் தடங்களான தொடருந்து பயணங்கள், பேருந்துப் போக்குவரத்துக்களை முடக்கி, மக்களை அலைக்கழித்திருக்கின்றது. இவற்றை எந்தக் கண்ணோட்டத்தில் இருந்து, கடந்த காலத்தில் அநுர தலைமையேற்று நடத்தினார் என்று தெளிவுபடுத்த வேண்டும். ஆட்சி அதிகாரத்தை அடையும் வரைக்கும்தான் நீங்கள் என்னுடைய சகோதரராயக்களும் தோழர்களும், அதன்பின்னர் நீங்கள் எல்லோரும் எதிரிகள் என்ற தோரணையில் அவர் அதிகாரம் கலந்த தொனியை மே தின உரையில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அதேவேளை, அநுரவின் மே தின உரையை படம் பிடித்து சமூக ஊடகத்தில் படமொன்றை பகிர்ந்தமைக்காக புகைப்பட ஊடகவியலாளரான லஹிரு ஹன்சன, ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில், பொதுக்கூட்ட மேடையொன்றில் அவரும் பவித்திரா வன்னியாரச்சியும் பேசிக் கொண்டிருக்கும் படத்தினை வெளியிட்ட ஊடகவியலாளர் அப்போது ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இருந்தவர்களினால் அச்சுறுத்தப்பட்டார். ராஜபக்ஷ காலத்தினருக்கு தாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை, அநுரவின் ஆள்களும் நிரூபிக்கின்றார்கள். ராஜபக்ஷ - பவித்திரா படத்திலாவது சற்று அஷ்டக்கோணலான விடயம் இருப்பதாக கொள்ள முடியும். ஆனால், அநுர இரு கைகளையும் வானத்தை நோக்கி வைத்துக் கொண்டிருப்பது மாதிரியான படமொன்றை பகிர்ந்தமைக்காக லஹிரு ஹன்சன மிரட்டப்பட்டிருக்கின்றார் என்றால், அதனை எப்படி எதிர்கொள்வது. ஹிட்லர், தன்னுடைய அரசியல் பிரச்சாரங்களை படம் பிடிப்பதற்காக பிரத்தியேக புகைப்படக் கலைஞரை வைத்து, பல அதிகார தோரணை உடல் மொழியோடு படங்களை எடுத்து, காட்சிப் பலகைகள், பத்திரிகை விளம்பரங்களில் பாவிப்பார். சற்று அஷ்டக்கோணலாக அல்லது அவரை சற்று பலமற்றவராக சித்திரிக்கும் படங்களைப் பிரசுரித்தால், அவர்களுக்கு எதிராக தன்னுடைய அதிகார அத்துமீறல்களைப் புரிந்திருக்கிறார். கிட்டத்தட்ட அதே தோரணையிலான ஒரு விடயத்தைத்தான் அநுரவின் ஜனாதிபதி ஊடகப் பிரிவினரும் புரிந்திருக்கிறார்கள். ஏனெனில், அநுர,தன்னால் ஏதும் முடியவில்லை, இறைவா ஏதாவது கொடு என்று இறைஞ்சுவது போல, அந்தப் படத்தினை ஜனாதிபதி ஊடகப் பிரிவினர் அர்த்தப்படுத்திக் கொண்டார்களோ தெரியவில்லை. இல்லையென்றால், ஒரு படத்தின் மீதும் ஏன் இவ்வளவு கோபம்? அதனால், ஊடக சுதந்திரத்தின் மீது அச்சுறுத்தல் விடுக்கும் நிலைக்கு ஏன் செல்ல வேண்டும்?

இன்னொரு பக்கம், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்களில் ஒருவராக எழுந்து இன்றைக்கு தேசியப் பட்டியல் உறுப்பினராக இருக்கும் லக்மாலி ஹேமச்சந்திரவும், மனித உரிமை அமைப்புக்கள் உள்ளிட்ட செயற்பாட்டு தளத்தினரை நோக்கி அச்சுறுத்தல் விடுக்கும் பேஸ்புக் பதிவொன்றை அண்மையில் விடுத்திருந்தார். “நாட்டு மக்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவினைப் பெற்று ஆட்சியில் இருக்கும் அரசாங்கோடு அனைவரும் இணைந்து

தொடர்ச்சி▼

# தேசிய மக்கள் சக்தியின் ராஜபக்ஷ முகம்!

**தொடர்ச்சி▲**

இயங்க வேண்டும். அதனைவிடுத்து, அரசாங்கத்தை எதிர்ப்பது நல்லதல்ல. அதன் விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டி வரும்.." எனும் தோரணையில் அந்தப் பதிவு இருந்தது. அதற்கு எதிராக சமூக ஊடகங்களில் பெரும் விமர்சனம் எழுந்ததும், அவர் தன்னுடைய பதிவினை அழித்துவிட்டார். சட்டத்தரணியான லக்மாலி ஹேமச்சந்திர, கடந்த காலத்தில் செயற்பாட்டாளராக தொடர்ந்து இயங்கியவர். நல்லாட்சிக் காலத்திலும், அதன் பின்னரான ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்திலும் புலமையாளர்கள் சந்திப்புக்கள், கூட்டங்கள் தொடங்கி போராட்டங்களிலும் பங்கேற்றவர். முற்போக்கு சிந்தனைத் தளத்தில் தன்னை முன்னிறுத்தியவர். ஆனால், தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக பதவியேற்றதும், ஜே.வி.பி.யின் கடந்த கால மனோநிலையை தனக்குள் உள்வாங்கிக் கொண்டு பிரதிபலிக்கத் தொடங்கியதன் விளைவுதான், அவரின் அந்தப் பதிவு.

வடக்கில் தேசிய மக்கள் சக்தியின் புலமை முகமாக காட்டப்படும் கபிலன் சுந்தரமூர்த்தி, பிரச்சாரக் கூட்டமொன்றில் பேசும்போது, ஊடகவியலாளர்களை நோக்கி 'காசுக்கு கூவும்' தரப்பினர் என்ற தொனியை வெளிப்படுத்தினார். தேசிய மக்கள் சக்திக்கு எதிராக தமிழ் ஊடகவியலாளர்கள் செய்திகளை வெளியிடுவதாக அங்கலாய்ந்த கபிலன், ஒரு கட்டத்தில் "...உங்களுக்கு எல்லாமும் காசுதான் வேண்டுமென்றால் சொல்லுங்கள். தருகிறோம். மக்களிடம் வாங்கித் தருகிறோம்..." என்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான அவர், சமூகக் கட்டமைப்பில் ஊடகவியலாளர்களின் பங்கினை மிக மலினப்படுத்தி பேசுவது அதிகார அகம்பாவம் இன்றி எதுவென்று கொள்வது? இராணுவம் உள்ளிட்ட அரச படைகளின் அச்சுறுத்தலுக்குள் நாளும் பொழுதும் நின்று தமிழ் மக்களின் வலிகளை உலகம் பூராகவும் எடுத்துச் சென்றவர்கள், தமிழ் ஊடகவியலாளர்கள். அதற்காகவே, பல உயிர் தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். இன்றைக்கும் பலருக்கு உயிரச்சுறுத்தல் உண்டு. அப்படியானவர்களை நோக்கி, காசுக்கு கூவும் தரப்பினர் என்று கபிலன் என்ன அடிப்படையில் கூற முடியும்? அவரின் அறம்சார் மனநிலைக்கு என்ன ஆனது? தேசிய மக்கள் சக்தியினரின் ஏதேச்சதிரகார உரையாடல்கள், ஊடக வெளிப்பாடுகளை ஊடகவியலாளர்கள் வெளிப்படுத்துவார்கள். அது அவர்களின் பொறுப்பு. அந்தப் பொறுப்பினைச் செய்தமைக்காக, ஊடவியலாளர்களை எதிர்க்கட்சிகளாக - ஊழல்வாதிகளாக சித்திரிப்பது என்பது ஜனநாயகத்தின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ளாதவர் செய்வதுதாகும்.

ராஜபகக்ஷக்கள் ஆட்சிக் காலத்தில், ராஜபகக்ஷக்களும் அவர்களின் விசுவாசிகளும் அணியும் ஆடைகள், அணிகலங்கள், பாதணிகளின் வர்த்தக குறியீடுகள் (brand), அவற்றின் பெறுமதி தொடர்பில் ஜே.வி.பி.யினர் சமூக ஊடகங்களில் பெரும் பிரச்சாரங்களை முன்னெடுத்திருக்கிறார்கள். மக்களின் பணத்தினை கொள்ளையடித்து எப்படியெல்லாம் செழிப்பாக வாழ்கிறார்கள் என்று விவாதித்திருக்கிறார்கள்; குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். ஆனால், மே தினக் கூட்டத்தில் அநுர அணிந்திருந்த மேற்சட்டையின் வர்த்தக குறியீடு (Tommy Hilfiger-shirt) தொடர்பில் விமர்சனம் எழுந்ததும், தேசிய மக்கள் சக்தியினர் எரிச்சல் அடைகிறார்கள். அரசியலில், குறிப்பாக ஜனநாயக வெளியில் கடந்த காலத்தில் நீங்கள் கையாண்ட ஆயுதங்களை, மற்றவர்கள் உங்களுக்கு எதிராக கையாளும் போது, நீங்கள் எரிச்சலடைகிறீர்கள். இதுதான், ஆட்சியதிகார ஆதிக்க மனநிலையாகும். ராஜபகக்ஷக்கள் நாட்டைக் கொள்ளையடித்து குடும்பங்களைச் செழிப்பாக்கியது போல, ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களுக்குள்ளேயே அநுரவும் நாட்டைக் கொள்ளையடித்துவிட்டார் என்று இந்த பத்தியாளர் கூற வரவில்லை. ஆனால், அரசியலில் சகிப்புத்தன்மை இல்லாத போது, கடந்த காலத்தில் நீங்கள் புரிந்த போராட்டங்களும், ஜனநாயகக் கூறுகளைக் காப்பதற்காக அர்ப்பணித்தவர்கள் என்று நீங்கள் கூறுவதெல்லாம் அடிபட்டுப் போகும். இலங்கையில், மிக விலையுயர்த்த வர்த்தகக் குறியீடுகள் உள்ள ஆடைகளை வாங்கிக் கொள்ள முடியும். அதுபோல, ஆடைத் தொழிற்சாலைகளில் இருந்து, பிரபல ஆடை நிறுவனங்களினால் தரக் கட்டுப்பாடு பூர்த்தி செய்யப்படவில்லை என்பதற்காக நிராகரிக்கப்பட்டு, உள்ளூர் சந்தையில் விற்கப்படும் ஆடைகளும் (factory outlet items) உண்டு. அங்கு, இந்த வர்த்தகக் குறியீடுகளுடன் ஆடைகளை வாங்க முடியும். இலங்கையின் பெரும்பாலான மக்களுக்கு ஆடைகளின் வர்த்தகக் குறியீடு அதன் விலை தொடர்பில் எந்த தெளிவும் இல்லை. அப்படியான கட்டத்தில், அநுரவின் ஆடை தொடர்பிலான விடயத்தை கடந்து போயிருக்க வேண்டும். அத்தோடு, அநுர உலகத் தரத்திலான ஆடைகளை அணியக் கூடாது என்ற எந்த கட்டுப்பாடும் இல்லை. அவருக்கு விரும்பியதை அவர் அணிந்து கொள்ளலாம். அதற்காக, பணம் எங்கிருந்து வந்தது என்பது தொடர்பில் கேள்வியெழுப்பப்பட்டால், அதனை விளக்க வேண்டியது அவரது கடமையாகிறது. ஏனெனில், அவர் இப்போது அரச பதவியில் இருக்கிறார். ஊழலுக்கு எதிராக முழங்கிக் கொண்டு, ஆயிரக்கணக்கான கோப்புகளை ஊடகங்களில் கடந்த காலங்களில் காட்டியவர். அதனால், அந்தக் கேள்விக்கு அவர் பதிலளிக்க வேண்டியிருக்கும்.

இந்தப் பத்தியில் தேசிய மக்கள் சக்தியினர் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள ஐந்து விடயங்களும், கடந்த சில நாள்களுக்குள் நடந்தவை. இப்படி அவர்களின் முன்னுக்குப் பின் முரணான நடவடிக்கைகள், அச்சுறுத்தல்கள், அதிகார அத்துமீறல்கள், வாய்க்கொழுப்புக்கள் பற்றி பேசுவதற்கு பல நூறு விடயங்கள் உண்டு. முதலில், ஜனநாயக வழியில், அதன் தூண்களைச் சிதைக்காது மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து இயங்க வேண்டும். மாறாக, ராஜபகஷக்களின் வழியில் தாங்களும் அதிகார துஷ்பிரயோகத்தோடு நடக்கப் போகின்றோம் என்று இயங்கத் தொடங்கினால், மீண்டும் அரகலயக்களும், ஆட்சி மாற்றமும் சாத்தியப்படும். ஏனெனில், கோட்டா பெற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றியைத்தான், இரண்டு ஆண்டுகளில் நாட்டு மக்கள் அகற்றினார்கள். அதனை, தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுள்ள தேசிய மக்கள் சக்தியினர் உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில், காலம் யாரையும் மன்னிப்பதில்லை.



# பெங்களூரில் பெய்த பலத்த மழை காரணமாக சென்னையில் தரையிறங்கிய 4 விமானங்கள்

பெங்களூரில் பலத்த மழை பெய்த தால், அங்கு தரையிறங்க முடியாத 4 விமானங்கள் சென்னையில் தரையி றங்கின. பெங்களூரில் நேற்று மாலை திடீரென்று பலத்த சூறைக்காற்றுடன் மழை பெய்தது. மோசமான வானிலை நிலவியதால், அங்கு விமான சேவை பாதிக்கப்பட்டது.

சிலிகுரியில் இருந்து 160 பயணி களுடன் சென்ற ஏர் இந்தியா எக்ஸ்பி ரஸ் விமானம், ராஜ்கோட்டில் இருந்து 154 பயணிகளுடன் சென்ற இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம், ஐதராபாத்தில் இருந்து 137 பயணிகளுடன் சென்ற இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம், ஹாங்காங்கில் இருந்து சென்ற சரக்கு விமானம் ஆகிய 4 விமானங்கள் மோச மான வானிலையால் பெங்களூரில் தரையிறங்க முடியவில்லை.

இதையடுத்து, அந்த 4 விமானங் களும் சென்னையில் வந்து தரையி றங்கின. அதேபோல், டில்லியில் இருந்து சென்ற 2 விமானங்கள் திருப்பதி யில் தரையிறங்கின. பெங்களூரில் வானிலை சீரானதும், சென்னை மற்றும் திருப்பதியில் இருந்து விமானங்கள் பெங்களூர் சென்று தரையிறங்கின.



# கோயில் திருவிழா நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழப்பு; 30 பேர் காயம்

கோவா மாநில கோயில் திருவிழாவில் ஏற்பட்ட கடுமையான கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளார். 30 இற் கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை அதி காலை நடந்துள்ளது.

கோவா மாநிலத்தில் உள்ள ஸ்ரீகாகோ பகுதியில் அமைந்துள்ளது ஸ்ரீலைராய் தேவி கோயிலில் ஆண்டுதோறும் நடை பெறும் ஜாத்ரா திருவிழா நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு திருவிழாவில் மக்கள் அதி கம் திரண்ட நிலையில் நெரிசல் ஏற் பட்டுள்ளது. இதில் காயமடைந்தவர்கள் கோவா மருத்துவக் கல்லூரி மருத் துவமனை, மபுஸாவில் உள்ள வடக்கு கோவா மாவட்ட மருத்துவமனை யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட னர்.

இதையடுத்து, காயமடைந்தவர்களை மருத்துவமனையில் நேரில் சந்தித்து கோவா மாநில முதல்வர் பிரமோத் சாவந்த் ஆறுதல் கூறினார். அதோடு கள சூழலையும் அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார். கோயில் திருவிழாவில் கூட்ட நெரிசல் ஏற்பட்டதற்கான காரணம் மற்றும் உயிரிழந்தவர்கள் குறித்த அதிகா ரபூர்வ தகவலை இன்னும் அதிகாரிகள் தெரிவிக்காமல் உள்ளனர். எனினும், இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர் என களத்தில் இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

கோயில் திருவிழாவில் கூட்ட நெரிசல் ஏற்பட்டதற்கான காரணம் அதிக அள வில் மக்கள் திரண்டதால்தான் என முதற்கட்ட தகவல் கிடைத்துள்ளது. இதை மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உறுதி செய்துள்ளார். காயமடைந்த 30 இற்கும் மேற்பட்டோரில் 8 பேர் ஆபத் தான நிலையில் சிகிச்சை பெற்று வரு கின்றனர் என கோவா மாநில சுகா தாரத் துறை அமைச்சர் விஸ்வஜித் ராணே கூறியுள்ளார். 10 பேருக்கு லேசான காயம் என அவர் தெரிவித்துள் ளார்.






# நிவாரணம் ஏற்றிச் சென்ற கப்பல் மீது ட்ரோன் தாக்குதல்

காஸாவிற்கு உதவி பொருள்கள் ஏற்றிச் சென்ற கப்பல் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் நடத்தியதாக அந்தப் பொருள்களைக் கொண்டுவந்த சேவை அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து ஃப்ரீடம் ஃபிளோட்டிலா கூட்டணி என்ற அந்த அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நிவாரணப் பொருள்களுடன் காஸாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த 'கான்ஷன்ஸ்' கப்பல் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டது.

மால்டாவிற்கு அருகிலுள்ள சர்வதேச கடல் எல்லையில் அந்தக் கப்பல் இருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கப்பலின் மின் உற்பத்தி மையத்தைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், இதன் விளைவாக, கப்பலின் உடலில் பெரிய துளை ஏற்பட்டு மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இந்த சேதத்தால் கப்பல் மூழ்கும் அபாயத்தில் உள்ளதுடன் இந்தத் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம்தான் நடத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும், இந்தக் குற்றச்சாட்டுக்கான ஆதாரம் எதையும் அந்த அமைப்பு வெளியிடவில்லை என ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, கப்பல் விடுத்த அவசர எச்சரிக்கை சமிஞையைக் கேட்டு அருகிலிருந்த இழுவைப் படகு ஒன்று உதவிக்கு விரைந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தின் போது கான்ஷன்ஸ் கப்பலில் 12 பணியாளர்கள் உள்பட 16 போர் இருந்ததாகவும் அவர்கள் கப்பலை விட்டு வெளியேற மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் காரணமாக கப்பலில் ஏற்பட்ட தீ கட்டுப்படுத்தப்பட்டதாகத் தெரிவித்த அதிகாரிகள், கப்பலில் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாவும் யாரும் காயமடையவில்லை என்றும் குறிப்பிடப்படுகின்றது.

கடந்த 2023 ஒக்டோபர் ஏழாம் திகதி இஸ்ரேலில் ஹமாஸ் படையினர் சுமார் 1,200 பேரை படுகொலை செய்து, 251 பேரை பணயக் கைதிகளாகக் கடத்திச் சென்றனர்.

அதில் இருந்து ஹமாஸ் படையினரை ஒழித்துக்கட்டுவதாக காஸாவில் தாக்குதல் நடத்திவரும் இஸ்ரேல், போர் தொடங்கியதில் இருந்தே அந்தப் பகுதிக்கு உணவு, மருந்து உள்ளிட்ட அனைத்து நிவாரணப் பொருள்கள் செல்வதையும் தடுத்துவருகிறது.

இதனால் இந்த 19 மாத கால போரில் மிக மோசமான மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே காஸாவில் இஸ்ரேல் தாக்குதலால் 52,000 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் (பெரும்பாலும் பெண்கள் மற்றும் குழந்தைகள்) உயிரிழந்த நிலையில், இஸ்ரேலின் இந்தத் தடையால் அத்தியாவசியப் பொருள்கள் பற்றாக்குறை ஏற்பட்டு அங்கு மனிதப் பேரழிவு ஏற்படும் என்று ஐ.நா. எச்சரித்து வருகின்றது.

இந்தச் சூழலில், காஸாவுக்குள் நிவாரணப் பொருள்களை ஏற்றிவந்த கப்பல் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் போருக்கு முன்னரே, கடந்த 2010 இல் இஸ்ரேல் இராணுவத்தின் காஸா முற்றுகையை மீறி அந்தப் பகுதியைநோக்கிச்சென்றமாவிமாமராஎன்ற கப்பல் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி ஒன்பது பேரைக் கொன்றது நினைவுகூரத்தக்கது.

எனவே, தற்போது கான்ஷன்ஸ் கப்பல் மீது தாக்குதல் நடத்தியதும் இஸ்ரேல் இராணுவமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவுக்கு எதிரான புதிய தடைகளை அறிவிப்பதற்கு அமெரிக்கா தீர்மானம்





ரஷ்யாவுக்கு எதிராக விதிக்கப்படவுள்ள புதிய தடைகளை அமெரிக்கா இறுதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வங்கி மற்றும் வலுசக்தி துறைகள் சார்ந்து, அமெரிக்கா புதிய தடைகளை அறிவிக்கவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் போர் நிறுத்த முயற்சிகளில் ரஷ்யாவின் ஆர்வத்தை அதிகரிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் ரஷ்யாவுக்கு எதிரான புதிய தடைகள் அமெரிக்க ஜனாதிபதியினால் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளை ரஷ்யா நிராகரித்த விடயத்தில் அமெரிக்கா விரக்தியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கங்கள் 03

# கனடா முரசு

சனிக்கிழமை | 03/05/2025

## பிரிட்டிஷ் கொலம்பியா காணாமல் போன சிறுமி

பிரிட்டிஷ் கொலம்பியா, சிலிவாக்கில் வசித்து வந்த 7 வயதான சிறுமி லிலி கூர்ஸொல் கடந்த வியாழன் பிற்பகல் முதல் காணாமல் போயுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

02



# பிரதமர் வேட்பாளரை தோற்கடித்தார் புரூஸ்

கனடாவில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், பிரதமர் வேட்பாளரை அவரது தொகுதியிலேயே தோற்கடித்துள்ளார் ஒருவர்.

பிரதமர் வேட்பாளரை அவரது தொகுதியான Carleton தொகுதியிலேயே தோற்கடித்த அந்த சாதாரண நபரின் பெயர் புரூஸ் ஃபேன்ஜாய்.

லிபரல் கட்சி சார்பில் போட்டியிட்ட புரூஸ், வீட்டிலிருந்தவண்ணம் தன் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்ளும் ஒரு தந்தை ஆவார்.

02



# டொரண்டோவில் கடுமையான பனி மூட்டம் குறித்து எச்சரிக்கை

டொரண்டோ பகுதியில் கடுமையான பனி மூட்டம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் மூடு பனி காரணமாக வாகனங்களை செலுத்த முடியாத நிலைமை ஏற்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த எச்சரிக்கையை கனடிய சுற்றுச்சூழல் திணைக்களம் விடுத்துள்ளது.

பாதைகளை தெளிவாக பார்க்க முடியாத காரணத்தினால் பயணங்கள் ஆபத்தாக இருக்கலாம் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், வாகன சாரதிகள் அவதானத்துடன் பயணங்களை

02

## டொரண்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை பனி மூட்டமான வானிலை தொடரும் எனவும் ஆனால் வெப்பநிலை 13°C ஆக குறையும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை மீண்டும் வெயில் காணப்படும், அதிகபட்ச வெப்பநிலை 14°C – இது பருவமழை சராசரியை விட 2°C குறைவானதாக காணப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.





## பிரிட்டிஷ்கொலம்பியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த சிறுமியை தேடும் அவசர நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

லிலி கடைசியாக Winona Road இல் 50800 பகுதியில் இருந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுமி அண்டையவர்களின் நாய்களை பின்தொடர்ந்து காட்டுப்பகுதிக்குள் சென்றுள்ளார் என தெரிகிறது, ஆனால் மீண்டும் திரும்பவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது, வான் வழியாகவும் மற்றும் தரை வழியாகவும் பரந்த அளவிலான தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுமி பற்றிய தகவல்கள் வருமாறு

- நிறம்: வெண்மைத் தோல்
- உயரம்: 4 அடி
- முடி: இளஞ்சாம்பு நிறம்
- கண் நிறம்: பழுப்பு

காணாமல் போன நேரத்தில் முழுக்க இளஞ்சிவப்பு ஆடைகள் அணிந்திருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

லிலியின் இருப்பிடத்தைப் பற்றிய எந்தவொரு தகவலும் இருப்பின், உங்கள் உள்ளூர் பொலிஸ் நிலையம் அல்லது Crime Stoppers (1-800-222-8477) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## பிரதமர் வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இத்தனைக்கும், இப்போதுதான் புரூஸ் முதல் முறையாக தேர்தலில் போட்டியிடுகிறார். இருந்தும், அவர் கன்சர்வேட்டிவ் கட்சி தலைவரும், அக்கட்சியின் பிரதமர் வேட்பாளருமான Pierre Poilievreயையே தோற்கடித்துவிட்டார்.

4,300 வாக்குகள் வித்தியாசத்தில் Pierre PoilievreI தோற்கடித்துள்ளார் புரூஸ்.

பிரச்சாரத்தின்போது புரூஸ் குழுவினரால் கவரப்பட்ட ஒரு சிறு கூட்டம் தன்னார்வலர்கள் பின்னர் பெருங்கூட்டமாகியுள்ளனர்.

சாதாரண உடையில் வீடு வீடாகச் சென்று புரூஸ் வாக்கு சேகரிக்க, Pierre, இது தன் தொகுதிதானே, தான் இந்த தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர்தானே என அலட்சியம் காட்டி, தொகுதி பக்கமே வரவில்லை என கூறப்படுகிறது.

இந்நிலையில், ட்ரம்ப் கனடாவை மிரட்டத் துவங்க, கனடாவுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை புரிந்துகொண்ட மக்கள், தாங்கள் கூறுவதைக் கவனித்துக் கேட்க தங்கள் வாசலுக்கே வந்த புரூஸ் மீது கவனம் செலுத்தத் துவங்கியுள்ளனர்.

புரூஸின் கடின உழைப்புடன் இவை எல்லாம் சேர்ந்து லிபரல் கட்சி சார்பில் போட்டியிட்ட புரூஸ்க்கு வெற்றியை வாங்கித் தந்துவிட்டன எனலாம்.



# புதிய நாடாளுமன்றத்தை ஆரம்பித்து வைக்குமாறு கனடிய அரசாங்கம் மன்னர் சார்ள்ஸிற்கு அழைப்பு

புதிய நாடாளுமன்ற அமர்வுகளை ஆரம்பித்து வைக்குமாறு கனடிய அரசாங்கம் மன்னர் மூன்றாம் சார்ள்ஸிற்கு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அழைப்பை மன்னர் ஏற்கும் பட்சத்தில், 1977 ஆம் ஆண்டில் இரண்டாம் எலிசபெத் மஹாராணி, நாடாளுமன்ற அமர்வுகளை ஆரம்பித்து வைத்ததன் பின்னர், முதன்முறையாக ஒரு மன்னர் கனடாவின் நாடாளுமன்ற அமர்வுகளை ஆரம்பித்து வைக்கக் கூடிய சந்தர்ப்பம் இதுவெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அழைப்பு தொடர்பில் பக்கிங்ஹாம் அரண்மனை அதிகாரபூர்வ ஒப்புதல் அளிக்கவில்லை.

மன்னரின் வருகை தொடர்பான முடிவை அரண்மனை அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டும் என்பது நடைமுறை மரபாகும்.

எனினும், மன்னர் சார்ள்ஸ் கனடா விஜயம் செய்யக் கூடிய வாய்ப்பு அதிகம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னர் பாராளுமன்றத்தை ஆரம்பிக்கும் போது, “Speech from the Throne” என அழைக்கப்படும் அக்கிராசன உரையை மன்னார் நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதில், அரசு தனது திட்டங்கள் மற்றும் நெருங்கிய காலப்பகுதியில் முன்னுரிமை வழங்கும் நடவடிக்கைகள் விவரிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், புதிய கனடா அரசு சிறுபான்மை பலத்தைக் கொண்டுள்ளது. புதிய நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு மே 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது என தற்போதைய நாடாளுமன்ற கால அட்டவணை குறிப்பிடுகிறது.

# குழந்தை ஆபரணங்கள் தொடர்பில் எச்சரிக்கை

அமேசான் வழியாக கனடாவில் விற்பனையான குழந்தைகள் ஆபரணங்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆபரணங்களில் அதிக அளவிலான இரும்புச்சத்து (lead) கண்டுபிடிக்கப்பட்டதால், கனடிய சகாதார முகவர் நிறுவனம் ஆயிரக்கணக்கான பொருள்கள் மீதான மீள அழைப்பை (recall) அறிவித்துள்ளது.

Dckazz Stitch and Scrump Best Friends Necklace எனும் ஆபரணங்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது நீல மற்றும் இளஞ்சிவப்பு நிறத்தில் உள்ள இரு லோக பதக்கங்களுடன் பிளாஸ்டிக் பையில் இணைத்து விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த நகை வகையில் அனுமதிக்கப்பட்ட அளவுகளைவிட அதிக அளவிலான இரசாயனங்கள் காணப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளதாக கனடிய சுகாதார முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நான்கு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான கைவினைப் பொழுதுபோக்கு தொகுப்பு, இதில் பலவகை முத்துக்கள், பதக்கங்கள், hair clips, keychains, தூக்கு நகைகள் ஆகியவை அடங்கியுள்ளன.



குழந்தைகளின் ஆரோக்கியத்தை பாதிக்கக் கூடிய வகையிலான சில உலோக இரசானயப் பதார்த்தங்கள் ஆபரணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.